பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
*09 09 2025* *TUESDAY* *12.40 PM*
ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1) குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு புதுதில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது.

2) கனமழை மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள இமாச்சலப்பிரதேசம், பஞ்சாப் மாநில மக்களுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3) மொரிஷியஸ் பிரதமர் திரு *Naveen Chandra Ramgoolam*, எட்டு நாள் அரசு முறைப்பயணமாக இந்தியா வந்துள்ளார்.

4) நேபாளத்தில் நடைபெறும் போராட்டம் காரணமாக, அந்நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் கவனமுடன் இருக்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

5) உலக வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Parneet Kaur* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-இனி விரிவான செய்திகள்-

<<<<<>>>>>>

குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு புதுதில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது.

நாடாளுமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில், பிரதமர் திரு நரேந்திர மோடி முதலாவதாக வாக்களித்தார்.

மத்திய அமைச்சர்கள், மாநிலங்களவை துணைத்தலைவர் திரு ஹரிவன்ஷ் சிங், முன்னாள் பிரதமர் திரு தேவேகவுடா, காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி உள்ளிட்டோர் வாக்களித்தனர்.

மக்களவை மற்றும் மாநிலங்களவையை சேர்ந்த உறுப்பினர்களும் வாக்களித்து வருகின்றனர்.

*வாக்குப்பதிவு மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது.*

*வாக்கு எண்ணிக்கை மாலை 6 மணிக்கு மேற்கொள்ளப்பட உள்ளது.*

*இத்தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக திரு சி பி ராதாகிருஷ்ணனும், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வேட்பாளராக ஓய்வுபெற்ற நீதிபதி திரு சுதர்சன் ரெட்டியும் போட்டியிடுகின்றனர்.*

*இதனிடையே, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய திரு சி பி ராதாகிருஷ்ணன், குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் தாம் வெற்றிபெறுவது நாட்டுப்பற்றுக்கான வெற்றியாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.*

*<<<<<>>>>>>*

*கனமழை மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள இமாச்சலப்பிரதேசம், பஞ்சாப் மாநில மக்களுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*இம்மாநிலங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நேரில் ஆய்வு செய்வதற்காக, புதுதில்லியில் இருந்து புறப்படும் முன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.*

*<<<<<>>>>>>*

*மொரிஷியஸ் பிரதமர் திரு Naveen Chandra Ramgoolam, எட்டு நாள் அரசு முறைப்பயணமாக இந்தியா வந்துள்ளார்.*

*இன்று காலை மும்பை வந்துள்ள அவர், தொழில்துறையினரை சந்தித்து பேசுகிறார்.*

*அதனைத்தொடர்ந்து, வாரணாசி, அயோத்தி, திருப்பதி உள்ளிட்ட இடங்களுக்கு செல்லும் மொரிஷியஸ் பிரதமர், புதுதில்லியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.*

<<<<<>>>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை ராணுவ வீரர்கள், கமாண்டர்கள், விஞ்ஞானிகள் மற்றும் அரசின் கூட்டு முயற்சி என்று ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த நடவடிக்கை தேசத்தின் ஒட்டுமொத்த அணுகுமுறையாக அமைந்தது என்று குறிப்பிட்டார்.

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப நவீன தொழில்நுட்பங்களை பின்பற்ற வேண்டியுள்ளதாக குறிப்பிட்ட ஜெனரல் உபேந்திர துவிவேதி, உள்நாட்டு தயாரிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது இந்திய செயற்கைக்கோள்கள் அனைத்தும் உதவிகரமாக இருந்ததாக இஸ்ரோ தலைவர் திரு நாராயணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு இஸ்ரோ வலுசேர்த்துள்ளதாக கூறினார்.

உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவித்து விண்வெளித்துறையில் இந்தியாவை உலகின் முன்னணி நாடாக திகழச்செய்யும் வகையில், விண்வெளி சார்ந்த தொழில் முனைவோருக்கு இஸ்ரோ உதவிகரமாக உள்ளதாகவும் திரு நாராயணன் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>>

நேபாளத்தில் நடைபெறும் போராட்டம் காரணமாக, அந்நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் கவனமுடன் இருக்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நேபாள அரசு அதிகாரிகள் வெளியிடும் நெறிமுறைகளை பின்பற்றுமாறும் அறிவுறுத்தியுள்ளது.

சுமூக வலைதளங்களுக்கான கட்டுப்பாடுகளை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள் கவலையளிப்பதாக உள்ளது என்றும், நிலைமையை இந்தியா உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, போராட்டங்களை ஒடுக்குவதற்காக படைகளை பயன்படுத்தும்போது அடிப்படை உரிமைகளை மீறாத வகையில் செயல்பட வேண்டும் என்று நேபாள அரசை, ஐ நா சபை கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<>>>>>>

உலக அளவில் பொருளாதார நிச்சயமற்ற சூழல் நிலவும் வேளையில் அமெரிக்கா – இந்தியா இடையிலான வலுவான ஒத்துழைப்புகளை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று அமெரிக்க – இந்திய வர்த்தக கவுன்சில் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பு காரணமாக இருதரப்பு வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் மற்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி அண்மையில் தெரிவித்துள்ள கருத்துக்கள், பரஸ்பர பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்பதை உணர்த்தியுள்ளதாக இந்த கவுன்சில் கூறியுள்ளது.

இருநாடுகளின் நலன் கருதியும், முதலீட்டாளர்கள் இடையே மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாகவும் இந்தியா – அமெரிக்கா வர்த்தக பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அந்த கவுன்சில் வலியுறுத்தியுள்ளது.

<<<<<>>>>>>

மத்திய அரசு மேற்கொண்ட சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

இதில் வேளாண் சாதனங்கள் மற்றும் இடுபொருட்களுக்கான வரி குறைப்பு தங்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்று தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

*(Voice Byte – இரண்டு விவசாயிகள் - 57 Sec. )*

<<<<<<>>>>>>

***தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியை பலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிஜேபி மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.***

***கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒத்த கருத்துடைய கட்சிகளை ஓரணியில் திரட்ட வேண்டும் என்ற நோக்கில் பிஜேபி செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.***

***குடியரசு துணைத்தலைவர் தேர்தலில், தமிழகத்தை சேர்ந்த திரு சி பி ராதாகிருஷ்ணன் வெற்றிபெறுவது உறுதி என்றும், இத்தேர்தலில் திமுக-வும், அதன் கூட்டணி கட்சிகளும் அவருக்கு ஆதரவு அளிக்காதது வரலாற்று பிழையாக அமையும் என்றும் திருமதி வானதி சீனிவாசன் கூறினார்.***

<<<<<<>>>>>>

***நாட்டின் வடகிழக்குப் பகுதிகள் மற்றும் மேற்குவங்கத்தில் இன்று கனமுதல், மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.***

***அந்தமான் நிக்கோபார் தீவுகள், பீகார், ஜார்கண்ட், கேரளா, ஒடிஷா, தமிழகம் மற்றும் புதுச்சேரி, காரைக்காலிலும் இன்று இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.***

***சட்டீஸ்கர், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், உத்தராகண்டின் சில பகுதிகளிலும், கடலோர ஆந்திராவிலும் இதே நிலை காணப்படும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.***

<<<<<<>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

***உலக வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Parneet Kaur அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.***

*தென்கொரியாவின் Gwangju-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 149-க்கு, 147 என்ற புள்ளிக்கணக்கில், இந்தியாவின் Jyoti Sureka-வை வென்றார்.*

*---------------*

*ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் தருண் மண்ணேப்பள்ளி, கிரண் ஜார்ஜ் சங்கர் முத்துசாமி சுப்பிரமணியன் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*--------------*

*தாய்லாந்தில் நடைபெற்றுவரும் உலக சீனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Mayank Dehal இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-8, 21-13 என்ற செட் கணக்கில், ஸ்பெயினின் Sebastian Lopez-ஐ வென்றார்.*

*<<<<<>>>>>>*